2014 ஜூலை 21]

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

200—

சீரமைத்தல்

***7883—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, நவல்பட்டு ஊராட்சி, அண்ணா நகர் போலீஸ் காலனி பகுதியிலுள்ள பாதாளச் சாக்கடையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், நவல்பட்டு ஊராட்சி, அண்ணாநகர் போலீஸ் காலனி பகுதியில் உள்ள பாதாளச் சாக்கடையைச் சீரமைக்க உத்தேசமாக ரூபாய் 3 கோடி செலவாகும். இதற்கு நவல்பட்டு ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, இப்பணியை மேற்கொள்ள இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவல்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள சாட்டிலைட் சிட்டி என்று அழைக்கப்படும் அண்ணா நகர் பகுதி மற்றும் கும்பக்குடி போன்ற பகுதிகளிலே அமைந்துள்ள இந்த நகரம்

கடந்த 33 ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டு, இன்றுவரை இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் சரிவர இயங்காத காரணத்தினாலே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஊராட்சியில் அமைந்துள்ள இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் சரிசெய்து, சுகாதாரமாக வாழ அந்தப் பகுதி மக்களுக்கு வழி செய்யுமாறு மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், நவல்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்துடன்கூடிய 1,850 வீடுகள் 1980–1981 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள பாதாளச் சாக்கடைக் குழாய்களின் மொத்த நீளம் 17,838 மீட்டர் ஆகும். இதில் 376* man–hole*-கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் உள்ள பகுதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சுமார் 15 ஆண்டுகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. அதன் பின்னர், இந்த வீடுகள் முந்தைய தி.மு.க. அரசால் 1999–2000 ஆம் ஆண்டில் நவல்பட்டு ஊராட்சி நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அண்ணா நகர் வீட்டு வசதி பாதாளச் சாக்கடைத் திட்டக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 12 ஆண்டுகள் முழுமையாகச் செயல்பட்டுள்ளது. பின்னர் 6 ஆண்டுகள் செயல்படாத நிலையில் உள்ளது. இந்தப் பாதாளச் சாக்கடை அமைக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சுத்திகரிப்பு நிலையம் செயல்படாததாலும், பாதாளச் சாக்கடைக் குழாய்கள் பூமிக்கடியிலே சிதைவடைந்த காரணத்தினால் கழிவுநீர் வெளியேற்றம் தடைபட்டதாலும்,* man–hole*-களில் அடைப்பு ஏற்பட்டதாலும், பாதாளச் சாக்கடை இயக்கத்தில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நவல்பட்டு ஊராட்சியிடம் 1999–லே கடந்த தி.மு.க. ஆட்சியிலே இத்திட்டம் ஒப்படைக்கப்பட்டது. அது தவறான செயலாகும். ஏனென்றால், ஒரு ஊராட்சியில் பார்த்தீர்களானால், ஊராட்சி மன்றத் தலைவர், ஒரு ஊராட்சிச் செயலாளர் மட்டும்தான்*

2014 ஜூலை 21]

இருப்பார்கள். அதனால், அதைப் பராமரிப்பதற்கு போதுமான நிதி வசதி இல்லை. ஆகவே, இதைச் செயல்படுத்த முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி ஏறத்தாழ 11,500 மக்கள்தொகையினைக் கொண்ட பகுதியாகும். பாதாளச் சாக்கடைத் திட்டம் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளிலே இன்று நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டம் நவல்பட்டு ஊராட்சிப் பகுதி Phase–I, Phase–III அண்ணா நகரிலும், பகுதி–2 கும்பக்குடி ஊராட்சியிலும் செயல்படுகிறது. இந்தத் திட்டம் ஊராட்சிப் பகுதியில் செயல்பட்டு வருவதால், ஊராட்சிக்கு உண்டான நிதியாதாரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை முறையாகப் பராமரிக்க இயலாது. எனவே, போதுமான நிதி, அதாவது Special Grant ஆண்டுதோறும் சிறப்பு நிதியினை வழங்கி இந்தத் திட்டத்தினைத் தொடர்ந்து சிறந்தமுறையில் இயங்க வழிவகை செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கையே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும் என்பதுதான். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 55 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் எடுக்கப்பட்டு, 35 திட்டங்கள் கைவிடப்பட்டு, 20 திட்டங்கள் எடுக்கப்பட்டு, அதிலும் ஒரே ஒரு திட்டம் மட்டும் அவசரகதியாக முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களால் பல்லாவரம் நகராட்சியில் தேர்தலுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மற்ற 19 திட்டங்களையும்

விட்டுவிட்டார்கள். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அனைத்துத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் 50 பாதாளச் சாக்கடைத் திட்டங்களை எடுத்து இன்றைக்கு அனைத்தையும் செயலாக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊராட்சியிலே இரண்டுபேர்தான் இருக்கிறார்கள். அதுவும் ஒரே தலைவர்தான் இருக்கிறார். ஆகவே, இந்தத் திட்டம் அருகில் உள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியில் சேர்க்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகராட்சியில் ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*